CC 425/2020

29.04.2024

பு.சா.1,

பெயர்: செல்வகுமார்

த/பெ. கிருஷ்ணசாமி

பு.சா.1 குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மடிகணிணி பழுது பார்க்கும் வேலை பார்த்துவருகிறேன். எதிரியை எனக்கு 10 ஆண்டுகளாகத் தெரியும். எதிரி என்னிடம் கணிணி வாங்கிய வகையில் பழக்கம். 18.08.2019 ம் தேதியன்று எதிரிக்கு நான் பணம் கொடுத்தேன். எதிரிக்கு பணம் கொடுக்கும்போது எதிரியின் கணவர் வந்திருந்தார், எங்கள் வீட்டில் என் மனைவி இருந்தார். 18.08.2019 ம் தேதி மாலை எதிரியும் அவரது கணவரும் என்னிடம் பணம் வாங்க வந்தார்கள்.

ரூ.6,40,000/- பணத்தை எதிரிக்கு நான் கொடுத்தேன். ரூ.6 லட்சம் என்று என் பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் ரெக்கப் பணமாகத்தான் எதிரியிடம் கொடுத்தேன். ரூ.500/- நோட்டாக ரூ.6,40,000/- ஐ கொடுத்தேன். எதிரி பணம் வாங்கிக்கொண்டு அன்றைய தினமே என்னிடம் காசோலை கொடுத்தார். மேற்படி பணத்தை நான் ரொக்கமாகக் கையில் வைத்திருந்தேன்.

நான் வருமான வரி 2020 ம் வருடம் வரை செலுத்திவந்தேன். மேற்படி பணம் கொடுத்த விபரத்தை வருமான வரி கணக்கில் கூறியுள்ளேனா என்றால் எனது கணக்காளரைக் கேட்டால்தான் தெரியும். தேவைப்பட்டால் எனது கணக்காளர் சாட்சி சொல்லுவார் என்றால் சரிதான்.

எதிரி இடம் வாங்குவதற்காக என்னிடம் கடன் கேட்டார். எதிரிக்கு என்னிடம் பணம் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் அவர் ஆசிரியையாகப் பணிபுரிந்து தேவையான பணம் சம்பாதிக்கிறார் என்றாலும் எதிரி காசோலையைக் கொடுக்கவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் பணம் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி 02.05.2024 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/- Thiru. E. Pragasam BA.,BL.,)**
Judicial Magistrate No. II,
Pollachi.